தினமலர்
சென்னை | ஞாயிறு | 19.5.2019

# உடல் உறுப்புகள் தானம் ஐந்து பேருக்கு மறுவாழ்வு

**சென்னை, மே 19–**

மூளைச்சாவு அடைந்தவரின் உடல் உறுப்புகள் தானத்தால், ஐந்து பேருக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியை சேர்ந்தவர், ஜான் கிளாரா, 50. மூளையில் ரத்தக்குழாய் வீக்கம் காரணமாக, சென்னை, போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்குதீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி, மூளைச்சாவு அடைந்தார்.

அவரது கணவர், சவரிமுத்து, மகன், மகள் ஆகியோர், ஜான் கிளாராவின் உடல் உறுப்புகளை தானமளிக்க முன்வந்தனர்.

இதன்படி, டில்லியை சேர்ந்தவருக்கு, கல்லீரல்; சென்னையை சேர்ந்தவருக்கு, சிறுநீரகம், ராமச்சந்திரா மருத்துவமனையில் பொருத்தப்பட்டன.

மற்றொரு சிறுநீரகம், அப்பல்லோ மருத்துவமனை; இதயம் மற்றும் நுரையீரல், மலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கு பொருத்தப்பட்டன.

உடல் உறுப்பு தானத்தால், ஐந்து பேருக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது.